**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

Calendar Case No: CC.311/2019

DEPOSITION OF WITNESS for Prosecution **அ.சா.2**

Name : **திருமதி.அம்சவள்ளி**
Father's/Husband Name: **திரு.செல்வராஜ்**
Village : **எஸ். ஆடுதுறை**
Taluk : **குன்னம்**
Age : 45 / 2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.10.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – கார்த்திகேயன் ஆஜர் இல்லை, (அவருக்காக கு.வி.ச. பிரிவு 317 ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது), 2ம் எதிரி – கதிர்வேல், ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகத 1ம் எதிரி கார்த்திகேயன் என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 ஆனந்தி எனது தங்கை ஆவார். ப.சா.1 செல்லம்மாள் எனது பாட்டியும், மாமியாரும் ஆவார். 24.09.2017ம் தேதி மாலை 04.00 மணிக்கு சண்டை நடந்தது. காத்திகேயன், கதிர்வேல், வேல்முருகன் மூவரும் வந்து எனது பாட்டியையும், எனது கணவர் செல்வராஜீயையும், சித்தி பூங்கொடியையும் அடித்துக்கொண்டு இருந்தார்கள். சத்தம் கேட்டு நானும் எனது தங்கை ஆனந்தியும், தங்கை கணவர் சரவணன் வந்து பார்த்தோம். அப்போது எனது ஆயாவை எதிரிகள் அடித்து நொறுக்கி கொண்டு இருந்தார்கள். கட்டையால் அடித்தார்கள். அன்று மருத்துவமனைக்கு செல்லமுடியவில்லை. 3 நாட்கள் கழித்து எனது பாட்டிக்கு

மிகவும் முடியாமல் போனதால் பெரம்பலூர் GH க்கு சென்றோம். இது சம்மந்தமாக பாட்டி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) எனது பாட்டிக்கு உடம்பில் எங்கும் காயம் இல்லை என்று சொன்னால் சரிதான். கீழே பிடித்து தள்ளியதில் இடுப்பு எலும்பு உடைந்துவிட்டது. அதற்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டதா, கட்டு போடப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. எந்த பக்க இடுப்பு உடைந்துவிட்டது என்றால் வலது புற இடுப்பு எலும்பு. இடுப்பு எலும்பு உடைந்துவிட்ட பின்பும் 3 நாட்கள் வீட்டிலேயே வைத்திருந்தோம் என்றால் சரிதான். நான் எனது கணவர் செல்வராஜ்யுடன் சேர்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. செல்வராஜ் எங்களது வீட்டை எதிரிகளுக்கு விற்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டில் தான் பாட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டை எதிரிகள் காலி செய்ய சொல்லியும் நாங்கள் மறுத்து வருகிறோம் என்றால் அது எங்கள் வீடு என்பதால் மறுக்கிறோம். வீடு சம்மந்தமாக சிவில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். சிவில் வழக்கு செல்வராஜ் தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் அவரது மகள்களுடன் சேர்ந்து தாக்கல் செய்துள்ளார். எதிரிகள் எனது பாட்டியை தாக்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக எனது பாட்டியை பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது வீட்டின் பக்கத்தில் நிறைய வீடு உள்ளது என்றால் சரிதான். பக்கத்து வீட்டுக்கார்கள் யாரும் சாட்சி சொல்லவரவில்லை என்றால் நாங்கள் எனது பாட்டியை அன்று மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். வீட்டை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.
Sd/-
District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.311/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. ஆனந்தி |
| Father's/Husband Name: | திரு. சரவணன் |
| Village : | எஸ். ஆடுதுறை |
| Taluk : | குன்னம் |
| Age : | 40 / 2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.10.2024.

**(1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி – கார்த்திகேயன் ஆஜர் இல்லை, (அவருக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது), 2ம் எதிரி – கதிர்வேல், ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ப.சா.1 செல்லாம்மாள் எனது பாட்டி ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 24.09.2017ம் தேதி மாலை 04.00 மணி இருக்கும். எனது பாட்டி செல்லம்மாளின் அலறல் சத்தம் கேட்டது. நானும் எனது கணவர் சரவணன் அக்கா அம்சவள்ளி ஆகியோர் ஓடிவந்து பார்த்தோம். எதிரி கதிர்வேல் அவரது மகன் கார்த்திகேயேன் எங்கள் ஊரை சேர்ந்த பெரியசாமி மகன் வேல்முருகன் ஆகியோர் எனது பாட்டியை கையில் உருட்டு கட்டையை வைத்துக்கொண்டு மிரட்டி இந்த தேவடியாளை அடித்து கொன்றால் தான் இந்த பிரச்சனை தீரும் என்று மிரட்டினார்கள்.

(ii). முதலில் கார்த்திகேயன் தான் அடித்தார். எங்களுக்குள் ஏற்கனவே நிலத்தகராறு இருந்து வந்துள்ளது. நாங்கள் ஏன் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு இந்த தேவடியாக்களை அடித்ததால் தான் நிலத்தகராறு தீரும் என்று சொல்லி கதிர்வேல் உருட்டுக்கட்டையால் எனது பாட்டியை அடித்தார். வேல்முருகன் எனது பாட்டியை காலால் இடுப்பில் எட்டி உதைத்தார். எதிரி கதிர்வேல் உருட்டுக்கட்டையை எங்களிடம் காட்டி என்னைக்கா இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன். அப்போது தான் இந்த பிரச்சனை தீரும் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். எங்களது பாட்டியை திருச்சியில் வைத்து வைத்தியம் பார்த்தோம். சரியாகவில்லை. 2 நாட்கள் கழித்து 27.09.2017ம் தேதி பெரம்பலூர் GHயில் சிகிச்சைக்கு சேர்த்தோம். நாங்கள் சம்பவத்தின் போது ஊரிலேயே பேசிக்கொண்டதால் புகார் கொடுக்கவில்லை. பின்னிட்டு எதிரிகள் கச்சிகார்களை கொண்டும், ஊர்காரர்களை கொண்டும் மிரட்டியதால் 13.11.2017ம் தேதி புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) நான் எந்த ஊரில் திருமணம் செய்து கொண்டேன் என்றால் திருமாந்துறையில் திருமணம் செய்து கொண்டேன். அங்கு தான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஆடுதுறையில் தான் வசித்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு கதிர்வேல் மற்றும் அவரது மகன் கிரையம் பெற்ற வீடு என்றால் சரியல்ல. அது யாருக்கு சொந்தமானது என்றால் நான் இருக்கும் வீடு எனக்கு சொந்தமானது. செல்வராஜ் எனது அக்கா கணவர் ஆவார். செல்வராஜ்க்கு சொந்தமான வீட்டில் தான் நான் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. செல்வராஜ் அந்த வீட்டை 1ம் எதிரிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் ஏமாற்றி வாங்கிவிட்டார்கள். கிரையம் பெற்றுவிட்டதால் எதிரிகள் வீட்டை காலிசெய்ய சொல்லி என்னிடம் பாலமுறை சொன்னார்கள் என்றாலும் அது தொடர்பாக பல்வேறு புகார் கொடுத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. எனது பாட்டி செல்லம்மாளை காரணமாக வைத்துக்கொண்டு வீட்டை காலிசெய்ய முடியாது என்று சொல்லி எதிரிகளிடம் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(ii). செல்வராஜ் கிரையம் கொடுத்துவிட்டதாகவும் அதனால் வீட்டை காலி செய்துவிடலாம் என்று சொல்லிய பின்னிட்டும் நான் காலிசெய்யமாட்டேன் என்று

பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. வீட்டில் மரபெட்டி ஒன்று உள்ளது என்றால் சரியல்ல. மாட்டுக்கொட்டைகையில் உள்ளது. வீட்டில் இருந்த மரபெட்டியை தான் நாங்கள் மாட்டுபட்டியில் வைத்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு வைத்ததை மலையில் வீனாகிவிடும் என்று எதிரி கேட்டார் என்றால் சரியல்ல. இதனால் எனது பாட்டியை வைத்து பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. உருட்டு கட்டையால் எதிரிகள் யாரையும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது அவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரியல்ல. வேண்டும் என்றே வழக்கை இழுத்து அடிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஊரில் இல்லாதவர்கள் பெயரில் பொய்யாக புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி கதிர்வேல் எனக்கு மாமா முறை என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai,
(FAC) Additional Mahila Court,
Perambalur.